**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 24.02.2026**
**OS. No. 45/2023**
**வழக்கு சாட்சி PW.2–திருமுருகன் , த/பெ.பழனி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) வாதி தங்கவேல் என் அண்ணன் என்றால் சரிதான். தாவா சொத்தின் பட்டா எண், விஸ்தீரணம் ஆகியவை தெரியுமா என்றால் தெரியும். வாதியின் தாவா சொத்திற்கும், எனக்கும் ஏதேனும் சம்மந்தம் உள்ளதா என்றால் உறவுமுறை தவிர வேறு சம்மந்தம் இல்லை. வாதி கேஸ் கம்பெனி வைத்து நடத்தி வருகிறார். அது தொடர்பாக அவ்வப்போது வெளியிலும் சென்று வருவார். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். என் நிரூபண வாக்குமூலத்தில் 3 வது பத்தியில் தாவா சொத்தில் விவசாயம் செய்த கூலி தொழிலாளர்களையும் விவசாய தளவாட இயந்திரங்களையும் பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக சொல்லியுள்ள விவரம் பிராது சங்கதிகளில் இல்லை என்றும், வழக்கிலேயே சொல்லாத ஒரு சங்கதி குறித்து தவறான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2) பிரதிவாதிகள் 28.12.2022 ல் அத்துமீறி நுழைந்து பயிர்களை நாசம் செய்ததாக நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் பிராது சங்கதிகளில் இல்லை என்றும், வழக்கிலேயே சொல்லாத ஒரு சங்கதி குறித்து தவறான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் அவ்வாறு ஒரு சம்பவம் நடந்தது. இந்த வழக்கு எந்த வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் 2022 ஆகும். நான் சொல்வது தவறு என்றும், வழக்கு 2023 ல் தான் தாக்கல் செய்யப்பட்டது என்றும், உண்மையாகவே மேற்கண்டவாறு 2022 ல் சம்பவம் நடந்திருந்தால் அதை என் அண்ணன் வாதி பிராதில் சொல்லியிருப்பார் என்றால் சரியல்ல.

3) வா.சா.ஆ–9 மனுவில் எந்த இடத்திலும் பயிர்களை நாசம் செய்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அதில் அளந்து தர சொல்லி மட்டும் தான் கோரியுள்ளோம், மாவட்ட ஆட்சியரிடம் மேற்கண்ட சங்கதி குறித்து புகார் அளித்துள்ளோம். எந்த முட்டுகல்லை பிரதிவாதிகள் பிடிங்கினார்கள் என்றோ, அது எங்கு அமைந்துள்ளது என்றோ, மொத்தம் எத்தனை முட்டுக்கல்லை பிடிங்கினார்கள் என்றோ என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். முட்டுகல்லை பிடிங்கியதாக என் அண்ணன் வாதி பிரதிவாதிகள் மீது வருவாய் துறையிலோ அல்லது காவல் நிலையத்திலோ புகார் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. உண்மையாகவே முட்டுக்கல்லை பிடிங்கியிருந்தால் புகார் கொடுத்திருப்போம் என்றும், அவ்வாறு எந்த சம்பவமும் நடக்காமலேயே பொய்யான சங்கதிகளை என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

4) என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 02.03.2023 ம் தேதியில் வட்டாட்சியர் வழங்கிய குறிப்பாணையான வ.சா.ஆ–8 ஆவணத்தில் முட்டுக்கல்லை பிடிங்கியதாக குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். 02.03.2023 ல் நிலத்தை அளப்பதற்காக கொடுத்த மனுவின் பேரில் வழங்கப்பட்ட குறிப்பாணையை எனது நிரூபண வாக்குமூலத்தில் முட்டுக்கல்லை பிடிங்கியதற்காக வழங்கப்பட்டதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 மனுவானது நான் வட்டாட்சியருக்கு கொடுக்கவில்லை எஎன்றால் சரிதான், என் அண்ணன் வாதி தான் கொடுத்தார். அந்த மனுவிற்கும், எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் என் அண்ணன் கொடுத்ததை தவிர வேறு சம்மந்தம் இல்லை. அந்த மனுவில் கண்ட நிலத்திற்கும், எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான்.

5) வா.சா.ஆ.12 சர்வேயர் கடிதமானது என் அண்ணன் தங்கவேலுவிற்கு சார்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்திற்கும், எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணங்கள் அனைத்தும என் அண்ணன் வாதிக்கு சம்மந்தப்பட்டவை என்றும், அதை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்வதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட

ஆவணங்களுக்கு உரியவர் என் அண்ணன் என்பதால் அவர் தான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும் என்றால் சரியல்ல. வழக்கிற்கும், என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், இரண்டுமே வேறுபாடாக உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சங்கதிகள் குறித்து எனக்கு தெரியாது என்றும், என் அண்ணனுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.